©
தமிழ்நாடு அரசு
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 3.20 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 43] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 6, 2013
ஐப்பசி 20, விஜய, திருவள்ளுவர் ஆண்டு–2044

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.**

*[அரசாணை (2D) எண் 19, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (J1)த் துறை, 21 மார்ச் 2013.]*

**அறிவிக்கை.**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 7–1–2009 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II பிரிவு 2–ல் 9 மற்றும் 10 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.ந.வே.வா/17/2009 ஆம் எண் தொழிலாளர் – வேலைவாய்ப்புத் துறையின், அறிவிக்கையை ரத்து செய்து, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள். ஆலோசனைக் குழுவைக் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் ரொட்டி மற்றும் பிஸ்கட் தயாரிப்பு பணியில் அமர்த்தப்பட்டுள்ள கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச்சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**ரொட்டி மற்றும் பிஸ்கட் தயாரிப்புப் பணியில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | | *தொழிலாளர்களின் வகைகள்* | *குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* |
|---|---|---|---|
| *(1)* | | *(2)* | *(3)* |
| **1.** | **பொதுவான வகைகள்** | | **ரூ. காசு** |
| | **1.** | மேலாளர் | **3627.00** (மாதம் ஒன்றுக்கு) |
| | **2.** | உதவி மேலாளர் | **3357.00** (மாதம் ஒன்றுக்கு) |
| | **3.** | காசாளர் / எழுத்தர் | **3016.00** (மாதம் ஒன்றுக்கு) |
| | **4.** | தட்டச்சர் | **3016.00** (மாதம் ஒன்றுக்கு) |
| | **5.** | விற்பனையாளர் | **3016.00** (மாதம் ஒன்றுக்கு) |

| *தொடர் எண்* | *தொழிலாளர்களின் வகைகள்* | *குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | **ரூ. காசு** |
| 6. | பண்டகசாலை உதவியாளர் | **2928.00** (மாதம் ஒன்றுக்கு) |
| 7. | ஓட்டுநர் | **2928.00** (மாதம் ஒன்றுக்கு) |
| 8. | காவலாள் / ஏவலாள் | **2701.00** (மாதம் ஒன்றுக்கு) |
| **2.** | **ஏனைய வகைகள்: (உயரளவு தேர்ச்சி பெற்றவர்கள்** | |
| 1. | ரொட்டி தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள மேஸ்திரி | **121.00** (நாள் ஒன்றுக்கு) |
| 2. | உயரளவு தேர்ச்சி பெற்ற ஏனைய வகை பணியாளர் | |
| | **தேர்ச்சி பெற்றவர்கள்**: | |
| 1. | மேற்பார்வையாளர் | **110.00** (நாள் ஒன்றுக்கு) |
| 2. | தலைமை ரொட்டி தயாரிப்பவர் | |
| 3. | மேற்சொன்ன வகைப்பாட்டின் கீழ் வராத தேர்ச்சி பெற்ற ஏனைய வகை பணியாளர் | |
| | **ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள்:** | |
| 1. | ரொட்டி தயாரிப்பவர் | **101.00** நாள் ஒன்றுக்கு |
| 2. | ரொட்டி தயாரிக்கும் அடுப்பைப் பராமரிப்பவர் | |
| 3. | டேபிள் மேன் (Table man) | |
| 4. | ரொட்டி மாவு தயாரிப்பவர் | |
| 5. | பன் தயாரிப்பவர் | |
| 6. | ரொட்டி வடிவமைப்பாளர் | |
| 7. | மேற்சொன்ன வகையின் கீழ் வராத ஓரளவு தேர்ச்சி பெற்ற ஏனைய வகையைச் சேர்ந்தவர்கள் | |
| | **தேர்ச்சி பெறாதவர்கள்:** | |
| 1. | ரொட்டி தயாரிப்பில் உதவுபவர் | ரூ. **90.00** நாள் ஒன்றுக்கு |
| 2. | உதவியாள் / உதவியாளர்கள் | |
| 3. | அனைத்து வகை துப்புரவாளர்கள் | |
| 4. | அனைத்து வகையைச் சேர்ந்த உதவியாளர் | |
| 5. | மேற்சொன்ன வகையின் கீழ் வராத ஓளரளவு தேர்ச்சி பெற்ற ஏனைய வகைப்பாட்டைச் சேர்ந்தவர்கள் | |

**விளக்கங்கள்:– (1)** அகவிலைப்படி :– மேற்சொன்ன அடிப்படை ஊதியங்களுடன் அகவிலைப்படி கீழே குறிப்பிடப்பட்டவாறு பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகருக்கான நுகர்வோர் சராசரி விலை குறியீட்டு எண்ணுடன் (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்) இணைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு, அகவிலைப்படியாக 18 காசுகள் (பதினெட்டு காசுகள் மட்டும்) வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி, முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கான அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான சராசரி விலைக்குறியீட்டு அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டின் சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(2) (i) நாள் ஊதியத்தை கணக்கிட மாத ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(ii) மாத ஊதியத்தை கணக்கிட நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

**3.** ஒரே தன்மை கொண்ட பணியைச் செய்யும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களுக்கிடையே பாகுபாடு காட்டக்கூடாது.

4. இங்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் தற்போது வழங்கப்படும் ஊதியங்கள் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம் அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 21, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 21 மார்ச் 2013.]*

**அறிவிக்கைகள்.**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மற்றும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 19–11–2008 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II பிரிவு 2–ல் 382 முதல் 384 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் – வேலைவாய்ப்புத்துறையின் II(2)/தொ.ந.வே.வா/550/2005 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை ரத்து செய்து, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள். ஆலோசனைக் குழுவைக் கலந்தாலோசித்த பின்னர், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் காப்பிகொட்டை பதப்படுத்தும் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச்சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**காப்பிகொட்டைப் பதப்படுத்தும் பணிகளில் உள்ள பணியாளர்கள்**

| *தொடர் எண்* | *பணியாளர் வகைகள்* | *குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **தொகுதி–I** | | |
| 1. | உதவி மேலாளர் | 3029.00 (மாதம் ஒன்றுக்கு) |
| 2. | கணக்காளர் | 2776.00 “ |
| 3. | எழுத்தர்கள்/தட்டச்சர்கள்/காசாளர்கள் | 2714.00 “ |
| 4. | அலுவலக உதவியாளர் | 2556.00 “ |
| 5. | காவலாள் | 2556.00 “ |
| 6. | குழந்தைகள் காப்பக ஆயா | 2531.00 “ |
| **தொகுதி–II** | | |
| 1. | மின் பணியாளர் | 2872.00 “ |
| 2. | தச்சர் | 2714.00 “ |
| 3. | பொருத்துபவர் | 2653.00 “ |
| 4. | என்ஜின் ஓட்டுநர் | 2872.00 “ |
| 5. | எந்திரக் கம்மியர் | 2837.00 “ |
| **தொகுதி–III** | | |
| 1. | பணியிட (Yard) கண்காணிப்பாளர் | 3029.00 “ |
| 2. | மேஸ்திரி | 2653.00 “ |

**சுமை ஏற்றுதல், இறக்குதல், குவித்து வைத்தல் ஆகிய பணிகள் பதப்படுத்தப்படாத காப்பிக்கொட்டை :—**

| | | | |
|---|---|---|---|
| 1. | லாரியிலிருந்து காப்பிகொட்டையை இறக்கி, குவித்து வைத்தல் | 21.24 (டன் ஒன்றுக்கு) | |
| 2. | முதல்நாள் உலர வைப்பதற்கு | 13.94 " | |
| 3. | மேலும் ஒருநாள் உலர வைப்பதற்கு | 7.85 " | |
| 4. | கிடங்கிற்கு எடுத்துச்செல்வதற்கு | 6.80 | |
| 5. | மீண்டும் ஓரிடத்தில் குவித்து வைப்பதற்கு | 7.33 " | |
| 6. | ஒரு கிடங்கிலிருந்து மற்றொரு கிடங்கிற்கு எடுத்துச் சென்று குவித்து வைப்பதற்கு | 14.65 " | |
| 7. | கிடங்கு (எடை போடுதல்) | 0.61 " | |
| 8. | காப்பி கொட்டைகளில் தோல் நீக்குதலுக்கு | 30.36 " | |
| 9. | மலைத்தோட்டத்தில் குத்திய காப்பிக் கொட்டைக்குத் தோல் நீக்குதல் | 18.23 " | |
| 10. | மலைத்தோட்டத்தில் குத்திய காப்பிக் கொட்டைகளை லாரிகளிலிருந்து இறங்குதலுக்கும் குவித்து வைத்தலுக்கும் | 16.95 " | |

**பதப்படுத்தப்பட்ட காப்பிக்கொட்டை :**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாற்றப்பட்ட மொத்த அளவு (பதப்படுத்தும் கிடங்கிலிருந்து) (From Garbling shed) | 0.71 (50 கிலோவுக்கு) | |
| 2. | மொத்த அளவு (முழுமையாக பதப்படுத்தப்பட்டது) | 1.79 (மூட்டை ஒன்றுக்கு) | |
| 3. | கலக்கப்பட்ட காப்பிக்கொட்டையின் மொத்த அளவு (பெருமளவு) | 7.33 (டன் ஒன்றுக்கு) | |
| 4. | மொத்தமாக ஓரிடத்தில் சேர்த்து வைத்தலுக்கு | 33.38 (டன் ஒன்றுக்கு) | |
| 5. | மாதிரி வகைளை பெறுவதற்கு (Samples Drawing) | 1.22 (மாதிரி ஒன்றுக்கு) | |
| 6. | தோல் நீக்கப்பட்ட காப்பிக் கொட்டைகளை விற்பனை செய்வதற்காக (Pee sales)<br>சிப்பம் கட்டுதல், வழங்குதல் (குறியிடுவது நீங்கலாக) சிப்பம் கட்டுதல்—எடை போடுதல்<br>மூட்டைகளை தைத்தல், சுமை ஏற்றுதல் | 24.28<br>9.10<br>12.14 | 45.52 (டன் ஒன்றுக்கு) |
| 7. | ஏற்றுமதி செய்யப்படும் காப்பிக்கொட்டைகளை சிப்பம் கட்டுதல்—வழங்குதல் (சிப்பம் கட்டுதல் நீங்கலாக) (60 கி.கி. சிப்பம் கட்டுதல்) சிப்பம் கட்டுதல் எடை போடுதல்<br>மூட்டைகளை தைத்தல், சுமை ஏற்றுதல் | 27.32<br>12.14<br>12.14 | 51.60 (டன் ஒன்றுக்கு) |
| 8. | ஏற்றுமதி செய்யப்படும் காப்பிக்கொட்டைகளைச் சிப்பம் கட்டுதல் — வழங்குதல் (குறியிடுவது நீங்கலாக) 75 கி.கி. சிப்பம் கட்டுதல்<br>சிப்பம் கட்டுதல்—எடைபோடுதல்<br>மூட்டைகளை தைத்தல், சுமை ஏற்றுதல் | 27.32<br>12.14<br>12.14 | 51.60 (டன் ஒன்றுக்கு) |
| 9. | வகை வாரியாக ஒதுக்கி வைத்தல் (Set a part) கட்டணங்கள் | 51/60 (டன் ஒன்றுக்கு) | |
| 10. | குறியிடல் | 0.90 (மூட்டை ஒன்றுக்கு) | |
| 11. | சாதாரண குறியிடல் | 0.61 " | |
| 12. | 'ஜோட்டா' (Jotta) கட்டணங்கள் | 18.23 (100 மூட்டைகளுக்கு) | |
| 13. | கிடங்கில் சிப்பம் கட்டுதல் (depot packing) | 51.60 (டன் ஒன்றுக்கு) | |
| 14. | நான்கு முனைகளிலும் தைத்தல், கயிறு கொண்டு கட்டுதல், ஆர்.சி (R.C.). கயிறு கொண்டு கட்டுதல் | 30.36 (டன் ஒன்றுக்கு) | |

| | | |
|---|---|---|
| 15. | காப்பிக்கொட்டையை ஏற்றுமதி செய்ய முத்திரையிடுவதற்கான கட்டணங்கள் | 6.08 (டன் ஒன்றுக்கு) |
| | **எடுத்துச்செல்வோர்:** | |
| 1. | பிளாண்டேஷன் ஏ & சி | 0.61 காசு (கிலோ ஒன்றுக்கு) |
| 2. | பிளாண்டேஷன் பி மற்றும் ப்பீபெரி | 0.71 காசு " |
| 3. | ரொபெஸ்ட்டா ஏ.பி & சி | 0.61 காசு " |
| 4. | அராபிகா செர்ரி மற்றும் ஏனைய வகைகள் | 0.93 காசு " |
| 5. | காப்பிக்கொட்டை மூட்டைகள், சாக்கு மூட்டைகள் ஆகியவற்றை எடுத்துவருதல், காப்பிக்கொட்டைகளைக் குவித்தல், தோல் நீக்குதல், எடைபோடுதல், ஆபத்து விளைவிக்கக்கூடிய ஏனைய பணிகளில் ஈடுபடுவோர்க்கு | 85.10 (நாள் ஒன்றுக்கு) |
| 6. | காப்பிக்கொட்டைகளைப் பரப்புவது, உலர்த்துதல், சேர்த்து குவித்து வைத்தல், தைத்தல் ஆகியவற்றிலும், பணியிடத்திலுள்ள பதப்படுத்தப்படாத காப்பிக்கொட்டை மூட்டைகளைச் சிப்பம் கட்டுதல், எடை போடுதல் ஆகியவற்றிலும், காப்பிக்கொட்டை சாக்கு மூட்டைகளைக் கட்டுதல், காப்பிக்கொட்டைகளைப் பக்குவமாக உடைத்தலிலும் ஈடுபடுவோர்க்கு | 83.95 (நாள் ஒன்றுக்கு) |

**விளக்கங்கள்:**

1. **அகவிலைப்படி :—** மேற்சொன்ன அடிப்படை ஊதியங்களுடன் அகவிலைப்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

(*i*) அகவிலைப்படியானது 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகருக்கான நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்) இணைக்கப்பட்டுள்ளது. 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு, அகவிலைப்படியாக 17 காசுகள் (பதினெழு காசுகள் மட்டும்) வழங்கப்பட வேண்டும்.

(*ii*) அகவிலைப்படி, முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கான அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து திருத்தியமைக்கப்பட வேண்டும்.

(*iii*) அகவிலைப்படியின் முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில் (ஆங்கிலத்தில்)* வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. பணி ஒரே தன்மையுடையதாக இருக்கும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களுக்கிடையே எவ்வித வேறுபாடும் இருக்கக் கூடாது.

3. *(i)* ஒரு நாள் ஊதியத்தை கணக்கிட, மாதாந்திர ஊதியங்களை 26 ஆல் வகுக்க வேண்டும்.

*(ii)* மாதாந்திர ஊதியங்களைக் கணக்கிட ஒரு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

4. தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள் இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ்வளர்ச்சி மற்றும்*
*செய்தித் (மொழிபெயர்ப்பு) துறை.*

*[அரசாணை (2D) எண் 22, தொழிலாளர்–வேலைவாய்ப்பு (J1)த் துறை, 21 மார்ச் 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 15–6–2008 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** சிறப்பு வெளியீட்டில் பாகம் II பிரிவு 2–ல் 1 மற்றும் 2 ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட தொழிலாளர் – வேலைவாய்ப்புத்துறையின், II(2)/தொ.வே./286(b)/2008 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள். ஆலோசனைக் குழுவைக் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாட்டில் சின்கோனா, ரப்பர், தேயிலை, காப்பி அல்லது ஏலக்காய் பயிரிடும் நோக்கத்திற்காக பராமரிக்கப்பட்டு வருகின்ற யாதொரு மலைத்தோட்டத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழே விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கதக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவராக இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச்சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**மலைத்தோட்டத்தில் வேலைவாய்ப்பு**

**குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (நாளொன்றுக்கு)**

| *தொழிலாளர்களின் வகைகள்* | *கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக பிற பகுதிகளில் தேயிலை தோட்டங்கள் மற்றும் சின்கோனா தோட்டங்கள்* | *காப்பி மற்றும் ஏலக்காய் தோட்டங்கள்* | *கன்னியாகுமரி மாவட்டத்தில் தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்கள்* |
|---|---|---|---|
| *(1)* | | *(2)* | |
| | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு |
| உரிய வயதடைந்தோர் | 90.00 | 88.50 | 94.00 |
| வளரிளம் பருவத்தினர் | 61.00 | 60.50 | 64.00 |

**விளக்கம்: (1) அகவிலைப்படி:–**

(*a*) மேற்சொன்ன குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களானது 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலை குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், மேற்சொன்ன மலைத்தோட்டங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி வழங்கப்படவேண்டும்.

உரிய வயதடைந்த தொழிலாளர்கள் – நாளொன்றுக்கு ஒரு புள்ளிக்கு 18 காசு.

வளரிளம் பருவத் தொழிலாளர்கள் – நாளொன்றுக்கு ஒரு புள்ளிக்கு 12 காசு.

(*b*) ஒவ்வோராண்டும் 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டு எண் அடிப்படையில் முறையே ஜனவரி முதல் நாளன்றும், ஏப்ரல் முதல் நாளன்றும் ஜூலை முதல் நாளன்றும் மற்றும் அக்டோபர் முதல் நாளன்றும் இரண்டாவது முந்தைய காலாண்டு தொடக்கமானது ஜூலை முதல் நாளன்றும், அக்டோபர் முதல் நாளன்றும், ஜனவரி முதல் நாளன்றும் மற்றும் ஏப்ரல் முதல் நாளன்றும் அகவிலைப்படி திருத்தப்படவேண்டும்.

(2) ரப்பர் தோட்டங்களில், ரப்பர் பால் வடித்தெடுக்கும் தொழிலாளர்களுக்கான செய்யும் வேலைக்கேற்ப குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்.

(a) உத்தரவாதமளிக்கப்பட்ட குறித்தகால வரையறைக்குட்பட்ட வேலைக்கேற்ற ஊதியம்–நாளொன்றுக்கு ரூ. 47.20.

(b) செய்யும் வேலைக்கேற்ற குறைந்தளவு ஊதியங்கள்–

**வகை—I** (ஏக்கர் ஒன்றுக்கு 113 கிலோகிராம் வரையிலான விளைச்சல் — ஆண்டொன்றுக்கு 0.404686 ஹெக்டேர்) முதல் $1^1/_2$ கிலோகிராம் உலர் ரப்பர் வரைக்கும் அரை கிலோ ஒன்றுக்கு ரூ. 15.73

**வகை—II** (ஏக்கர் ஒன்றுக்கு 113 கிலோகிராம் முதல் 181 கிகி வரையிலான விளைச்சல் — ஆண்டொன்றுக்கு 0.404686 ஹெக்டேர்) முதல் $2^1/_2$ கிலோ உலர் ரப்பர் வரைக்கும் அரை கிலோ ஒன்றுக்கு ரூ. 9.44.

**வகை—III** (ஏக்கர் ஒன்றுக்கு 181 கிலோகிராம் முதல் 272 கிகி வரையிலான விளைச்சல் — ஆண்டொன்றுக்கு 0.404686 ஹெக்டேர்) முதல் $4^1/_2$ கிலோகிராம் உலர் ரப்பர் வரைக்கும் அரை கிலோ ஒன்றுக்கு ரூ. 5.24.

**வகை—IV** (ஏக்கர் ஒன்றுக்கு 272 கிகிராமுக்கு மேற்பட்ட விளைச்சல் — ஆண்டொன்றுக்கு 0.404686 ஹெக்டேர்) முதல் $6^1/_2$ கிலோகிராம் உலர் ரப்பர் வரைக்கும் அரை கிலோ ஒன்றுக்கு ரூ. 3.63.

(C) ஏனைய காலவரையரைக்குட்பட்ட வேலைக்கேற்ற ஊதியம் பெறும் ரப்பர் தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் அதே அகவிலைப்படி வழங்கப்படும்.

3. பணியின்தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

4. தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் இடங்களிலெல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ்வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 198, தொழிலாளர்—வேலைவாய்ப்பு (J2)த் துறை, 26 ஆகஸ்ட் 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 9 ஆம் பிரிவிலும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 6—3—2013 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II பிரிவு 2—ல் 195 மற்றும் 196 ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின், II(2)/தொ.வே./240//2013 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில், ''வேலை அளிப்பவரின் பிரதிநிதிகள்'' என்ற தலைப்பின் கீழ் இனம் எண். (3)—இல் வரும் ''புதிய எண் 4281, புதிய ஆவடி சாலை'', என்ற சொற்றொடருக்கு பதிலாக ''(புதிய எண் 42) எண் 81, புதிய ஆவடி சாலை'', என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ்வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 199, தொழிலாளர் வேலைவாய்ப்பு (J2)த் துறை, 26 ஆகஸ்ட் 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 9 ஆம் பிரிவிலும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 30–1–2013 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II பிரிவு 2–ல் 98 ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின், II(2)/தொ.வே./118//2013 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில், ''வேலை அளிப்பவரின் பிரதிநிதிகள்'' என்ற தலைப்பின் கீழ் இனம் எண் (3)–இல் வரும் ''திரு. ஐ. ஆஸ்டின்'' (I. Austin) என்ற சொற்றொடருக்கு பதிலாக ''திரு. ஜி. ஆஸ்டின்'' (G. Austin) என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ்வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.